# கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி
# S.C.No.71/2020

2025 ஆம் வருடம் ஜனவரி மாதம் 08 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மணிகண்டன் (அ.சா.7) | தொழில் | : | ரேசன் கடை ஊழியர் |
| த/பெ., க/பெ. | : | பழனிவேல் | வயது | : | 33 |
| கிராமம் | : | பழனி டவுன் | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 08.01.2025 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

எதிரி முன்னிலையாகியுள்ளார்.

**முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**நான் பழனி சாரப் நாயக்கர் தெருவில் குடியிருந்து பழனி டவுன் ரேசன் கடையில் ஊழியராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. என் மாமியார் பழனி அரசு மருத்துவமனையில் அனுமதியாகியிருந்தார். அவரை பார்க்கச்சென்றபோது போலீசார் அரசு மருத்துவமனையில் வைத்து அடிதடி வழக்கு சம்பந்தமாக என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். நான் கையொப்பமிட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியவில்லை.**

**(அரசு தரப்பு வேண்டுகோளை ஏற்று சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

**கடந்த 29.06.2016ம் தேதியன்று மதியம் 02.00 மணிக்கு நானும் பழனியைச் சேர்ந்த மாரிக்கண்ணு என்பவரும் பழனி காரமடை பஸ் ஸ்டாப்**

அருகில் நின்றுகொண்டிருந்தபோது பழனி நகர் காவல் நிலைய ஆய்வாளர் காவல் நிலைய குற்ற எண்.524/2016 என்ற வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயால் செய்தார் என்றும், அதில் நானும் மேற்படி மாரிக்கண்ணுவும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.01.08 19:00:03 +0530